

## முன்னுரை

ஐந்தாண்டுத் திட்டங்கள் நாட்டின் வளர்ச்சிப் பாதையின் மைல் கற்கள். கடந்த 55 ஆண்டுகளாக இந்தியா தனது குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்குத் திட்டமிடலை வெற்றிகரமாகப் பயன்படுத்தி வந்துள்ளது.

திட்டமிடலின் முழு வெற்றி சாதாரண மக்கள் வாழ்வில் ஏற்றம் பெறுவதில் தான் நிறைவு பெறும். இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும், பொருளாதார–சமூகநலத் திட்டங்களை இயற்றுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும், மாநிலங்களின் ஆக்கப்பூர்வமான பங்கு உயர்ந்து வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழ்நாடு சமூக நீதியுடன் இயைந்த வளர்ச்சியை எட்டுவதில் முன்னிலை வகிக்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் வேளாண்மை வளர்ச்சி பின்தங்கியுள்ளது. 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலம் வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் ஊட்டுவது குறித்துத் தனிக்கவனம் செலுத்தும். வளர்ச்சியில் தனி மனிதர் எவர் ஒருவரும் விடுபடாமல் இருப்பதற்கு உறுதி செய்யும் வகையில் சமூகப் பாதுகாப்பு அமைப்பினை வலுப்படுத்த வேண்டும்.

11ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அடைய வேண்டிய இலக்குகள், எதிர்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் பற்றி ஒரு பொது கருத்து உருவாவது, வளர்ச்சிப் போக்கிற்கு வலுவினை ஊட்டும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத் திட்டக்குழு இந்த அணுகுமுறை அறிக்கையை மக்கள் முன் வைக்கிறது. அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், பல்துறைச் சார்ந்த வல்லுநர்கள், பொதுநல ஆர்வலர்கள், தமிழ்நாட்டின் நலன் மீது அக்கறை கொண்ட அனைத்து குடிமக்களும் இவ்வறிக்கையின் மீது தங்களின் கருத்தினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர். மு. கருணாநிதி,
முதலமைச்சர்

சென்னை

**நவம்பர், 2006**